# பேரறிஞர் அண்ணா பிறந்தநாள்: கழகத்தினர் மரியாதை!



திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்த நாளை முன்னிட்டு, அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, ஒருபோதும் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என்று, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் கழகத்தினர் உறுதிமொழி ஏற்றனர். உடன் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்.பி., டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்.பி., மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், இரா.ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியாவிஜயரங்கன் உட்பட பலர் உள்ளனர்.



திருக்கோவிலூர் நகரத்தில் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ, தலைமையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என உறுதிமொழி ஏற்றனர். மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், தொகுதி பார்வையாளர் கார்த்திகேயன், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் மு.தங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் T.செல்வராஜ், நகர செயலாளர் கோபிகிருஷ்ணன், நகர மன்ற துணை தலைவர் குணா, மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளை முன்னிட்டு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்டக் கழக செயலாளர் ஆர்.காந்தி இராணிப்பேட்டை மாவட்டம் வி.சி.மோட்டூரில் உள்ள பேரறிஞர் அண்ணாவின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத்காந்தி, ஜி.கே.குழுமம் சந்தோஷ்காந்தி, நகர செயலாளர் பி.பூங்காவனம், வாலாஜா ஒன்றிய குழு தலைவர் சேஷாவெங்கட ரமணன் , மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி , ஒன்றிய செயலாளர்கள் எம்.சண்முகம், பத்மநாபன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத், பேரூர் செயலாளர் சி.பெரியசாமி, ஊராட்சி மன்ற தலைவர் முனுசாமி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செஞ்சியில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் உறுதிமொழி ஏற்றனர்.உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான்,செஞ்சி தொகுதி தேர்தல் பார்வையாளர் கார்த்திகேயன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் ,நகர செயலாளார் கார்த்திக் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.



திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. சார்பில் வாணியம்பாடியில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்திற்கு திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, தமிழ்நாட்டை தலைகுனிய வைக்க மாட்டேன் என உறுதிமொழி ஏற்று அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினார். இந்நிகழ்வில் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் நூருல்லா, மாவட்ட துணை செயலாளர் ஆ.சம்பத்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.அசோகன், ஆலங்காயம் கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.தாமோதிரன், ஆலங்காயம் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் வி.ஜி.அன்பு, பொதுக்குழு உறுப்பினர் கோவிந்தம்மாள்பெருமாள், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தே.பிரபாகரன், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் எஸ்.ராஜா, மாவட்ட பிரதிநிதி சி.சிவகுமார், ஆலங்காயம் மத்திய ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வி.எஸ்.கார்த்திக், மாவட்ட அயலக அணி து.அமைப்பாளர் சக்கரவர்த்தி மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உடன் இருந்தார்கள்.

# தமிழர் நிலத்தின் அணையா விளக்கு பேரறிஞர் அண்ணா!!



பேரறிஞர் அண்ணா ஓர் அரசியல் தலைவர் மட்டுமல்லர். அவர் ஓர் அறிவுக மேதை. உலக வரலாற்றில் தம் அரசியல் இயக்கத்தை ஒரு குடும்ப உறவாக வளர்த்த பெருமைக்குரிய தலைவர் அவர். தலைவர் தொண்டர் என்ற நிலையை மாற்றி அண்ணன் தம்பி என்ற உறவுநிலையை நிலைநாட்டிய அரசியல் அறிஞர், அண்ணா அவர்கள். "தம்பி நான் உனக்குத் தலைவனில்லை. உனக்கு அண்ணன். உன் குடும்பத்தின் மூத்த மகன். ஒரு தாய் நம்மைச் சுமக்க முடியாத காரணத்தால் தனித்தனியாகப் பிறந்திருக்கிறோம்." அண்ணா.

பேரறிஞர் அண்ணாவின் அறிவாற்றல் பன்முக ஆற்றலாகப் பரிணமித்து அவரைத் தனிப்பெரும் மிக்க சான்றாளர் ஆக்கியது. ஓர் ஆற்றல் மிக்க பேச்சாளர், வலிமை மிக்க எழுத்தாளர், வளமிக்க நாடகாசிரியர், எளிமையான கவிஞர், கண்ணியம் மிக்க அரசியல் தலைவர், நேர்மையான நிர்வாகி, மனிதநேயப் பண்பாளர், மக்கள் சிந்தனையாளர் எனப் பன்முகப் பரிமாணம் கொண்ட தலைவர் அண்ணாவிற்கு முன்பும் இருந்ததில்லை. பின்பும் இருப்பதரிது.

தமிழ்நாட்டில் அறிவுப்பாதைக்கென்று , சுயமரியாதை உணர்வுக்கென்று, பாதை காட்டி இயக்கம் கண்ட தந்தை பெரியாரின் விருப்ப சீடனாகவே அண்ணா இருந்தார். எப்போதும் இருந்தே வந்திருக்கிறார். பெரியாரின் புரட்சிகரச் சிந்தனைக்கு வலுவூட்டும் ஆற்றலாளர் என்கின்ற அளவுக்கு அண்ணாவின் எழுத்து, பேச்சு, எண்ணம், அவரின் அன்பு, மரியாதை, நன்படிப்பு, மொழிப்பற்று, ஆதிக்க எதிர்ப்பு, ஜாதி, கடவுள், மூட நம்பிக்கை எதிர்ப்பு. என ஐயாவின் அரசவையில் முன்னிலை தளபதியாய் என்றும் இருந்தே வந்திருக்கிறார். ஐயா விற்கும் அண்ணாவிற்கும் 1949 வரையிலான தொடர்பு மிகச் சுவையானது. 1949 அய்யா அண்ணா கருத்து வேறுபாட்டால், திராவிடர் கழகத்திலிருந்து விலகி அண்ணா தி.மு.கழகத்தினை தோற்றுவித்தார். தி.மு.கழகம் தோன்றியதற்கான காரணங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால் திமு கழகத்தின் கொள்கை பிரகடனம் திராவிடர் கழகத்தின் கொள்கை பிரகடனமே.

தி.மு.கழகம் தேர்தலில் நிற்கும் முன்பு வரை அதாவது 1956 திருச்சி தி.மு.க. 2வது மாநில மாநாட்டில் தான் தேர்தலில் போட்டியிடுவதா? இல்லையா? என்கின்ற வாக்கெடுப்பின் அடிப்படையில் போட்டியிடலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. (அது ஜனநாயகத்தின் ஊன்றுகோலாக பார்க்கிறோம் இன்று வரையில்)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மொத்த செயல்திட்டமும் இந்தி எதிர்ப்பு, சாதி ஒழிப்பு, சுயமரியாதை, பகுத்தறிவு கொள்கை பரப்புதல், என்று அடிப்படை வேலைகளை செய்து கொண்டிருந்தனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

தி.மு.கழகம் தேர்தல் பாதைக்கு வந்த பிறகும்கூட கொள்கையில் இருந்து மாறுபடவில்லை. இன்னும் சொல்லப்போனால் 1967 அண்ணா முதல்வர் பதவி ஏற்ற போது " இந்த அமைச்சரவையே பெரியாருக்குக் காணிக்கை ஆக்குகிறேன்" என்று முழங்கினார். முழங்கியதோடு மட்டுமல்லாமல் செயலிலும் செய்து காட்டினார். பெருமைமிகு அண்ணா முத்தான மூன்று சட்டம் மட்டுமல்லாமல் கொள்கை வழிநின்று தேர்தல் பாதையிலும் " நான் கண்டதும் கொண்டதும் ஒரே தலைவர் பெரியார் " என்று, தன் இலட்சிய கனவுகளுக்கு பாதை அமைத்திட்டார் அறிஞர் அண்ணா. கட்சி வேறானாலும் குறிக்கோள் ஒன்றேயாதலின் இரு கட்சிகளும் " இரட்டைக் குழல் துப்பாக்கியாக செயல்படும்" என்றார் அண்ணா. அந்த வகையில் அண்ணாவிற்கு பிறகு கலைஞரும், கலைஞருக்குப்பிறகு தலைவர் தளபதி அவர்களும் திராவிடர் கழகத்தோடு தோளோடு தோளாக நிற்பது என்பது நிதர்சனமான உண்மை.

**பேச்சாற்றலும் எழுத்தாற்றலும்:**

"கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்" என்ற திருக்குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் அண்ணா. அவருடைய பேச்சிலே எளிமை இருக்கும், இனிமை இருக்கும், கருத்துச் செறிவு இருக்கும். அண்ணாவின் பேச்சாற்றலுக்கு முன்னுதாரணமாக உலக வரலாற்றில் யாரையும் சொல்ல முடியாது. பேரறிஞர் அண்ணாவின் பேச்சு நடையும் தனித்தன்மையானது. இலக்கியத் தமிழும் அடுக்கு நடையும் எதுகை, மோனை, இயைபு நயங்களும் அவர் பேச்சில் துள்ளி விளையாடும். அதே சமயம் வெறும் அலங்காரப் பேச்சாக ஒருபோதும் தம் சொற்பொழிவை அண்ணா அமைத்துக் கொண்டதில்லை. கருத்தாழமிக்க பொழிவாகவே அவருடைய ஒவ்வொரு பேச்சும் அமைந்து சிறக்கும்.



**சைதை சாதிக்**
**தலைமைக் கழகப் பேச்சாளர்**

பேச்சாற்றலில் சிறந்து விளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுத்தாற்றலிலும் தன்னிகரற்று விளங்கினார். அறிஞர் அண்ணாவின் பேச்சாற்றல் நாற்றங்கால் என்றால் அவரின் எழுத்தாற்றல் விளைநிலத்திற்கு ஒப்பாகும். பேச்சுக்கும் எழுத்துக்குமான இடைவெளியை பேரறிஞர் அண்ணா அவர்கள் பெரிதும் குறைத்தார் என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் அவர் எழுதுவது போலப் பேசினார். பேசுவது போல எழுதினார். அண்ணா எழுதிய 'தம்பிக்குக் கடிதங்கள்' என்ற மடல் இலக்கியம் இதற்குத் தக்கதோர் சான்று.

**அண்ணாதுரை - அறிஞர் அண்ணா ஆனது எப்படி?**

புகழ் பெற்ற எழுத்தாளர் கல்கி இரா. கிருட்டிணமூர்த்தி ஒரு கூட்டத்தில் கலந்துகொண்டார். அக்கூட்டத்திற்கு வருவதாக இருந்த முதன்மைப் பேச்சாளர்கள் வரவில்லை. அந்நிலையில் கூட்டத்தில் இருந்தோரை நோக்கி 'உங்களில் யாரேனும் பேசுகிறீர்களா?' என கல்கி கேட்டார். அப்போது கூட்டத்தில் இருந்த அண்ணாத்துரை எழுந்து சென்று பேசினார். அவரது பேச்சைக் கேட்ட கல்கி, 'இன்று முதல் இவர் அண்ணாதுரை இல்லை! அறிஞர் அண்ணா!!' என்று பாராட்டிப் பேசினார். அதுவே அவரது பெயராக நிலைத்து விட்டது.

அறிஞர் அண்ணா அவர்கள் அமெரிக்க நாட்டின் யேல் பல்கலைக்கழகத்திற்குச் சென்றிருந்தார். அப்போது அங்குள்ள மாணவர்களிடம் உரையாடினார். உரையாடலின் இடையே ஒரு மாணவர் எழுந்து 'தாங்கள் ஆங்கிலத்திலும் வல்லவர் என்று தெரியும். ஆங்கில எழுத்துகளான 'A,B,C,D' ஆகிய நான்கு எழுத்துகளும் வராத நூறு வார்த்தைகளைக் கூற முடியுமா?' எனக் கேட்டார். உடனடியாக விடையளித்தார் அறிஞர் அண்ணா. வியப்பாக இருக்கிறதா? ஒன்று முதல் தொண்ணூற்று ஒன்பது வரையிலான எண்களை ஆங்கிலத்தில் சொன்னார் அவர். நூற்றை ஆங்கிலத்தில் சொன்னால் அதில் 'D' என்னும் எழுத்து வந்து விடும் என எல்லோரும் எதிர்பார்த்திருந்த போது 'STOP' எனக் கூறி நிறைவு செய்தார்.

ஆழியில் புதைந்து கிடந்த தமிழரின் அடையாளங்களைக் கரைசேர்த்தவர். காரிருளில் மறைந்திருந்த தமிழரின் பாண்பாட்டை மீட்ட உதயசூரியன். ஆரியமாயையில் சிக்கிக்கிடந்த தமிழரின் அரசியலைப் பெரியாரின் தளபதியாய் பெரியாருக்கே காணிக்கையாக்கியவர் பேரறிஞர் அண்ணா.

பெரியாருடன் அண்ணாவிற்கான உறவை அவர் வாய்மொழியாகவே சொல்வதானால், "1935 இல் பெரியாரைச் சந்தித்தேன்,. அன்று முதல் அவரின் சுவீகாரப் புத்திரன் ஆனேன்" என்றார். பெரியாரின் நிழலாக உடன் இருந்தார். 1937 இல் நடைபெற்ற இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் அண்ணாவை மக்களுக்கு அறிமுகப்படுத்தியது.

அரசியலாளர், எழுத்தாளர், பேச்சாளர், இலக்கியவாதி, கதையாசிரியர், வசனக்கர்த்தா, கவிஞர், நிர்வாகி, பகுத்தறிவாளர், போராளி எனப் பல கலைகளைக் கொண்டு தமிழரின் பண்பாட்டில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினார். அண்ணாவின் 'வேலைக்காரி' திரைப்படம் திரையுலகின் திருப்புமுனை. மன்னர்கள், புராணங்கள் போன்ற கதைகளை மட்டுமே படமாக்கிக் கொண்டிருந்த திரையுலகில் எளிய மக்களின் நடைமுறை வாழ்வியலைப் படமாக்கினார் அண்ணா. அதுபோல் அவர் தொட்ட அனைத்துத் துறைகளிலும் புதுமைகள் மிளிர்ந்தது, தமிழரின் பண்பாடு புது வண்ணம் கொள்ளத் தொடங்கியது. அவரின் இளவல்கள் பலரும் அண்ணாவைப் போல அனைத்து ஊடகங்களையும் கையாண்டனர். அவர்களுக்கு அண்ணா, ஆலமரத்தின் அடிமரம் போல் விளங்கினார். இளவல்கள் அதன் விழுதுகள் ஆனார்கள். Anna பெரியாருடன் இருந்த அந்தக் காலம் தன் வாழ்வின் வசந்தகாலம் என்றார் அண்ணா. இந்நிலையில் 1947 இல் இந்தியாவை விட்டு ஆங்கிலேயர்கள் வெளியேறினர். இனி தமிழர் நலனிற்குத் தேர்தல் அரசியல் தவிர்க்க முடியாத ஒன்றாகக் கருதிய அண்ணா, பெரியாரிடம் இருந்து பிரிந்தார். தி.மு.க உதித்தது. திராவிட முன்னேற்ற கழகம் உதயமாகி 2 ஆண்டிற்குள் 4000 கூட்டங்கள் தமிழ்நாடு முழுவதும் நடத்தினார். ஓய்வில்லாமல் இரவெல்லாம் படிப்பு, எழுத்து என்று நேரத்தைச் செலவளித்தார் அண்ணா.

அவரால் மேடைப்பேச்சில் புதிய பல சொற்றொடர்கள் தமிழுக்குக் கிடைத்தன. 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு' 'வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது' 'கட்டித் தங்கம் பெட்டியில் வைத்தேன்' 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' 'உடைவாளை எடுத்து உருளைக்கிழங்கு வெட்டுவதா?' 'இதையும் தாங்கும் இதயம் வேண்டும்' என்பன போன்றவை. வடமொழிச் சொற்களுக்கு மாறாகப் புதிய தமிழ்ப்பதங்கள் உலாவரத் தொடங்கின. உறுப்பினர், ஊராட்சி ஒன்றியம், செயற்குழு, அமைச்சர், அவைத்தலைவர், சட்டப்பேரவை இவைபோல் பல. எந்த மேடையும் நமஸ்காரம் சொல்லவில்லை. 'வணக்கம்' என்று முழங்கின. அண்ணாவால் தமிழினத்தின் பண்பாடு, வாழ்வியல் மாற்றம் பெற்றது. அண்ணாவின் வழி பழைமை என்னும் பாதாளத்திற்கு இட்டுச் செல்லும் வழி அல்ல. தன்னம்பிக்கையுடன் நவீனத்திற்கு இட்டுச் செல்லும் பாதையது.

இந்நிலையில் 1963 இல் திமுகவைக் குறிவைத்துக் கொண்டு வரப்பட்ட பிரிவினைத் தடைச் சட்டம் மூலம் பிரிவினை கோரும் கட்சிகளைத் தேர்தலில் பங்கேற்கத் தடை செய்ய முடியும். இந்த இக்கட்டான சூழலில் அண்ணா சாதுர்யமாக பிரிவினையைக் கைவிட்டு மாநில சுயாட்சியைக் கையில் எடுத்தார். 1965 இல் ஏற்பட்ட மொழிப்போரால் திமுக ஆட்சிக் கட்டிலை எட்டிப் பிடிப்பதை யாராலும் தடுக்க முடியவில்லை. முதல் மொழிப்போருக்கு ஊரூராய் சென்று முழங்கி போராட்டக் களத்தை உருவாக்க அரும்பாடு பட்ட அண்ணா. 1965 இல் ஏற்பட்ட மொழிப் போரைச் சாதுர்யமாகக் கையாண்டார். கழகத் தொண்டர்கள், மாணவர்கள், பொது மக்கள், தமிழரின் தனித்துவத்திற்காக உயிரைத்தரத் தயாராக இருந்தவர்கள், ஆன்மீகவாதிகள், நாத்திகர்கள் என்று அனைவர் உள்ளங்களையும் வென்றார்.

1967 இல் நடைபெற்ற தேர்தலில் அண்ணா அரசியல் உலகில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தினார். தேர்தலில் தனித் தனியாகப் போட்டியிடுவதே அந்தக் காலத்தில் வழக்கம். அவற்றை ஒருங்கிணைக்க கூட்டணி என்ற புதிய ஆயுதத்தை உருவாக்கினார் அண்ணா.

ஆட்சிப் பொறுப்பேற்ற அண்ணா, அன்றைய பெருஞ்சிக்கலாக இருந்த பஞ்சத்தைப் போக்க ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்கினார். எளிமைக்கு எடுத்துக்காட்டாக, அமைச்சரின் ஊதியங்கள் பாதியாகக் குறைக்கப்பட்டது. சென்னை மாகாணம் 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றம் செய்து தமிழ்மக்களின் உணர்வு பூர்வமான கோரிக்கையை நிறைவேற்றினார். பகுத்தறிவுப் பாதையில் சுயமரியாதைத் திருமணச் சட்டம் கொண்டு வரப்பட்டது. எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு இருமொழிக் கொள்கை உருவாக்கப் பட்டது

**அண்ணாவின் சுயமரியாதை உணர்வு!**

அண்ணா ஆட்சிக்கு வந்த பிறகு ஒரு சுற்றறிக்கை வெளியிட்டார். அரசு ஊழியர்கள் தாங்கள் எழுதும் கடிதங்களில் சம நிலையில் உள்ளவர்களுக்கு 'Transmitted' என்றும், தனக்கு கீழே உள்ளவர்களுக்கு 'Directed' என்றும் உயர் அதிகாரிகளுக்கு 'Submit' என்றும் எழுதுவார்கள். வெறும் 'Submit' என்று எழுத மாட்டார்கள் I Beg to Submit என்று எழுதுவார்கள். கீழே கடைசியாக 'Yours Faithfully, Sincerely' என்று எல்லாம் போடமாட்டார்கள் 'Yours Obediently' என்றுதான் எழுதுவார்கள். 'Beg' என்ற சொல்லை பயன்படுத்தக் கூடாது, 'Submit' என்று எழுதுங்கள். 'Obediently' என்று எழுதக்கூடாது, 'Yours Faithfully' என்று எழுதினால் போதும் என்று சுற்றறிக்கை அனுப்பினார் அண்ணா.

தன்மானமிக்க ஒருவர் இன்னொருவரிடம் போய் எதுக்கு 'Beg' to Submit என்று சொல்ல வேண்டும்? அவர்களும் ஒரு அரசு ஊழியர், நீயும் ஒரு அரசு ஊழியர் என்று வார்த்தையில் கூட சுயமரியாதை உணர்வை ஏற்படுத்தினார் அண்ணா. இது சிறிய செய்தியாக இருக்கலாம். ஆனால் அன்றைக்கு உயர் அதிகாரிகள் எல்லாம் பார்ப்பனர்கள்தான். இதை எல்லாம் யோசித்துதான் அண்ணா வார்த்தைகளை மாற்றினார். சுயமரியாதையை பாதிக்கிற ஒரு சொல்லை அரசாணையின் வழியாக நீக்கினார். இந்த செய்தி சிறியதாக இருந்தாலும் தாக்கம் பெரிது.

சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லும் என்று ஆக்கியது, தமிழ்நாடு என்று பெயர் மாற்றியது, இரு மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தியது என 3 முக்கிய சாதனைகளை செய்திருக்கிறார் அண்ணா. ஒருவேளை ஆங்கிலமும் இந்தியும் அப்போது கற்றிருந்தால் இன்றைக்கு தமிழர்களின் நிலை என்ன என்பதை உங்களின் கற்பனைக்கே விட்டு விடுகிறேன். அண்ணா குறைந்த காலம் தான் ஆட்சியிலே இருக்கிறார். ஆனால் அவர் செய்த பணிகள் முக்கியமானவை.

பேரறிஞர் அண்ணா 60ஆம் வயதில் மறைந்தாலும் தந்தை பெரியாரின் பல கொள்கைகளுக்குத் தமிழ்நாட்டில் அடித்தளம் அமைத்தார். 1967இல் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு அமைச்சரவையே தந்தை பெரியாருக்குக் காணிக்கை என்று சட்டமன்றத்தில் அறிவித்தார். மிகத் துணிவுடன் அரசு அலுவலகங்களில் இருந்து கடவுள் படங்களை நீக்கினார். சுயமரியாதை திருமணச் சட்டத்தை இயற்றினார். சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டினார். தற்போது உச்ச நீதிமன்றம் இந்து மத மரபுகளைக் கடைப்பிடித்து திருமணம் செய்தால்தான் இந்து திருமணம் செல்லும் என்று ஓர் அதிர்ச்சியான தீர்ப்பை வழங்கியுள்ளது. இதன் தொடர் பாக ஓய்வுபெற்ற நீதி நாயகம் சந்துரு அவர்கள் ஆங்கில ஏட்டிலும் ஜூனியர் விகடன் ஏட்டிலும் இரு கட்டுரைகள் எழுதியிருந்தார். தமிழ்நாட்டில் மட்டும்தான் இந்து திருமண முறை சடங்குகளைப் பின்பற்றாமல் பார்ப்பனரை வைத்து நடத்தும் வைதீக முறையை ஏற்காமல் நடத்தப்படும் திருமணம் சட்டப்படி செல்லும் என்ற கருத்தைப் பல நீதிமன்றத் தீர்ப்புகளைச் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டிருந்தார். இது தந்தை பெரியார் வலியுறுத்திய சுயமரியாதை திருமண முறையும் அறிஞர் அண்ணா அளித்த சட்ட வடிவமும் காலத்தி னால் என்றும் நிலைத்திருக்கக் கூடிய வலிமையான சட்டம் என்பதை இன்று பல முற்போக்காளர்கள் உணர்கின்றனர்.

அறிஞர் அண்ணா தொலைநோக்குமிக்க திராவிட இயக்கத் தலைவர் மட்டுமல்ல; தந்தை பெரியாரைப் பிரிந்திருந்தாலும் தந்தை பெரியாரின் கொள்கையை விட்டுக் கொடுக்காமல் அக்கொள்கைகளைப் போற்றியவர் என்பதற்கு மேற்கூறிய சட்டமன்ற நிகழ்வு எடுத்துக்காட்டுகிறது. இந்தச் சட்டமன்ற உரை நிகழ்த்தப்பட்டு பத்தாண்டுகளுக்குப் பிறகு 1967இல் முதல்வராகப் பொறுப்பேற்றுத் தந்தை பெரியாரின் சமூக நீதி, மாநிலங்கள் உரிமை, பெண்ணுரிமை போற்று வதற்குப் பல திட்டங்களைச் செயல்படுத்தி மெய்ப்பித்தார். இந்தச் சமூகச் சீர்திருத்தத் தொடர் பயணத்தை அறிஞர் அண்ணாவிற்குப் பிறகு கலைஞர் தனது 5 முறை முதல்வராகப் பொறுப்பேற்ற காலத்தில் தொடர்ந்தார்.

அறிஞர் அண்ணா அவர்கள் காலமானபோது அவருக்கு இறுதி மரியாதை செலுத்த வந்தவர்கள் 1.5 கோடிப் பேர். ஒரு தலைவருக்கு இந்த அளவு அதிக எண்ணிக்கையில் மக்கள் கூடியது இன்றளவும் கின்னசுச் சாதனையாகும்.

கலைஞர் 1971ஆம் ஆண்டில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தைச் சட்டமன்றத்தில் நிறை வேற்றினார். சனாதன வெறியர்கள் உச்சநீதிமன்றத்திற்குச் சென்று இந்து மரபுகளை அழிக்கும் முயற்சி என்று தடை பெற்றனர்

2006இல் கலைஞர் 5ஆம் முறையாக முதல்வராகப் பொறுப்பேற்ற போது அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக லாம் சட்டத்தை மீண்டும் இயற்றி இன்று உச்சநீதிமன்றத் தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணாவின் கொள்கை வாரிசு திராவிட மாடல் நாயகன் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சர் பதவி ஏற்று அண்ணாவின் கனவை 2021-இல் திமுக ஆட்சியமைந்த பிறகு பயிற்சிப் பெற்ற அனைத்துச் சாதிகளைச் சார்ந்த 24 அர்ச்சகர்களுக்குப் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.